**இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் - 2023**

-----------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) மற்றும் 108(1) உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்தில் புதிய கட்டிடத்தை வலைப்பின்னல் படுத்துதல் மற்றும் இணையதள வசதிகளை வழங்குவதற்காக 2023 ஆம் ஆண்டிற்காக AHEAD செயற்திட்டத்திலிருந்து செலவிடப்பட்ட ரூபா 3,061,415 மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் இணையதள முறைமை ஸ்தாபிக்கும் கட்டணம் மற்றும் அலுவலக உபகரணங்களுக்காக பகிர்ந்தளிக்கும் கிரயமாக AHEAD செயற்திட்டத்தின் மூலம் செலவிடப்பட்ட ரூபா 2,552,370 கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது. மேலும் பல்கலைக்கழக வளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதி முறைமை, மலக்கழிவுகள் போக்குவரத்து முறைமை மற்றும் தொடர்பாடல் முறைமை என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் மதிப்பீட்டு செய்யப்பட்டு ஆதனங்கள், பொறிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேலும் ஆராய்ந்து எதிர்காலத்தில் தேவையான சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயமான | கட்டிடங்களுக்கான பெறுமானத் தேய்வு சதவீதம் 05 வீதமாக இருந்தமையால் 2016 இன் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க |

| | | |
|---|---|---|
| பெறுமதி மாற்றமடைகின்ற ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் அல்லது ஐந்து ஆண்டுகளுக்கும் ஒரு தடவை மீள் மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பல்கலைக் கழகத்திற்கு சொந்தமான காணிகள் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 325,750,000 தொகையில் மீள்மதிப்பீடு செய்த பின்னர் 10 வருடங்களும், கட்டிடம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 3,523,975,000 தொகையில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் 07 வருடங்களும் கடந்திருந்த போதிலும் அவற்றை மீண்டும் மீள்மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கட்டிடங்கள் 2035 வரை பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றமையும் தற்போது சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்காக பணம் அறவிடப்படுகின்றமையினால் மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக 03 வருடங்களுக்கு அல்லது 05 வருடங்களுக்கு ஒரு தடவை கணிசமான கிரயமொன்றை செலவிட முடியாதிருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு பிணைமுறி உடன்படிக்கைகளை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 21,475,657 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளில் உள்ளடக்கப்படும். | பெற வேண்டிய வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது வழங்குநர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,898,397 ஆன தாமதக் கட்டணம் பல்கலைக்கழகத்தின் வருமானமாக இனங்காணப்படாமல் நடைமுறைப் பொறுப்பாக காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமானத்தால் முறையே | 2024 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக வருமானத்திற்கு எடுக்கப்படும். | வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைத்தும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் இருவரின் பதவி உயர்வின் காரணமாக நிலுவைச் சம்பளம் செலுத்தும் போது ஏற்பட்டிருந்த வழுக்களை சரிசெய்யும் போது திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட வேண்டிய ரூபா 818,886 ஆண்டின் செலவினத்திலிருந்து குறைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் திரண்ட நிதியம் அப்பெறுமானத்தால் முறையே அதிகரித்தும் மற்றும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். | ஆண்டிற்குரிய வருமானம் செலவினம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | செலவிடப்படாத மூலதன மானியங்கள் கணக்குகளில் செலவு மீதியாக காணப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு 05 மூலதனக் கணக்குகளுக்குரிய ரூபா 15,229,232 கூட்டுத்தொகையான அசாதாரண வரவு மீதி நீண்ட காலம் முதல் நிதி நிலைமைக்கூற்றில் காணப்பட்டது. | செலுத்துவதற்காக பட்டியல்கள் சமர்பிக்கப்படுகின்றமையாலும், மூலதன காசு மீதி காணப்படுகின்றமையாலும் இந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது வெளிவாரி பாடநெறிகளில் இருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 11,571,562 வருமானத்தில் முன்னைய ஆண்டிற்குரியதாக கிடைத்த ரூபா 1,040,275 மற்றும் எதிர்வரும் ஆண்டிற்காக கிடைக்கப்பெற்ற ரூபா 3,977,284 ஆண்டின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை ரூபா 5,017,559 அதிகரித்தும், திரண்ட நிதியம் ரூபா 1,040,275 இனாலும் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் | 2022 ஆம் ஆண்டு வரை காசு அடிப்படையில் இந்த கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீடு செய்யப்பட்டமையால் அந்த ஆண்டிற்குரியதாக கிடைத்த வருமானம் மற்றும் 2023 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற வருமானம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இது எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்வரும் ஆண்டிற்கான பெறுவனவுகள் ரூபா 3,977,284 இனாலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது செலவிடப்படாத மூலதன மானியம் ரூபா 199,345,754 நிதி நிலைமைக் கூற்றில் மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து கிடைத்த வருமானமாக இனங்காணப்பட்டதன் காரணமாக ஆண்டின் வருமானம் மற்றும் செலவிடப் படாத மூலதனம் மானியக் கணக்கு அப்பெறுமானத்தால் முறையே அதிகரித்தும், குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் மதிப்பீட்டிற்காக பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு வருமானமாக கணக்கீடு செய்யப்படும். | ஆண்டின் போது பரிமாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து கிடைத்த மானியத்தில் செலவிடப்பட்ட அளவை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571 | 2012 முதல் 2019 வரையான காலப்பகுதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ள 12 ஒப்பந்தங்களுக்குரிய நிறுத்திவைத்தல் பணம் ரூபா 49,374,509 தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது ஒப்பந்தகாரர் களால் கோரப்பட்டுள்ள பட்டியல்கள் பொறியில் பிரிவினால் பரீட்சிக்கப்படுவதுடன் கோரப்படாத ஒப்பந்தகாரர்களுக்கு பட்டியல்களை சமர்ப்பிக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஒக்போர் 03 ஆந் திகதிய இலக்கம் 08/2023 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி | பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் வெளிச்செல்கை முறையாக உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,029,973,587 | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான திருத்தப்பட்ட தாபனவிதிக் கோவையின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறுவனங்களுக் கான திருத்தப்பட்ட தாபனவிதிக் கோவையின் 09 ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பந்தி | செலுத்தப்பட்டிருந்தது. | | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக்கோ வையின் XV ஆம் அத்தியாயத்தின் 5.2 ஆம் பிரிவு | சம்பளமின்றிய விடுமுறைக்காலத்திற்காக கணிப்பீடு செய்யப்பட வேண்டிய தண்டப்பணம் விரிவுரையாளர்கள் இருவரிடமிருந்து உடன்படிக்கைகளில் ரூபா 577,473 குறைத்தும் ரூபா 12,050,096 தொகை அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்யப்பட்ட சம்பளமின்றிய பிணைமுறி உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு எதிர்காலத் தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்தின் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 348,844,768 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 283,361,091 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 632,205,859 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீண்டெழும் வடிவிலான செலவினத்திற்காக அரசாங்கத்தின் மானியப் பெறுவனவு, மீண்டெழும் வடிவிலான நன்கொடைப் பெறுவனவுகள், முதலீட்டு வருமானம் மற்றும் ஆதன வாடகை வருமானங்கள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கற்கை விடுமுறை பெற்று பிணைமுறி உடன்படிக்கை மீறி 01 வருடத்திற்கும் 20 வருடங்களுக்கும் இடையிலான காலம் கடந்திருந்த 08 விரிவுரையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய பிணைமுறிகளின் பெறுமதி ரூபா 53,772,566 ஆகும். | அறவிட வேண்டிய நிலுவை பிணைமுறியினை தவணையாக அறவிடப்படுவதுடன் பணம் செலுத்தாத விரிவுரையாளர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் பிணைமுறைகளின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1999 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழகத்தின் மாக்கத்துற வளவில் பேணிச் செல்லப்படுகின்ற 22 ஏக்கர் காணியை சட்டரீதியாக பல்கலைக்கழகத்திற்கு கையேற்கப்படாதிருந்ததுடன் 2013 திசம்பர் 31 இல் உள்ளவாறு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அந்த காணிகளின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 40,000,000 ஆகும். 2023 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்தக் காணிக்கான உரித்து கையளிக்கும் சான்றிதழ் அல்லது (Vesting Certificate) பெறப்படாமல் மாக்கந்துற வளவில் பெறுமதி ரூபா 2,973,247,723 ஆன கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக முன்னுரிமை எடுத்து நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளர் பண்ணலவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி நடவடிக்கைகள் பண்ணல பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்படும். | பல்கலைக்கழகம் உரித்து கோராடுகின்ற காணிகள் சட்ட ரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 711 பேர்ச் அளவான 08 வயல் காணிகளைக் கையேற்பதற்காக ரூபா 1,013,750 முற்பணத் தொகை மற்றும் தெங்கு ஆராய்ச்சி சபைக்குரிய 05 ஏக்கர் காணி என்பவற்றைக் கையேற் பதற்காக ரூபா 10 மில்லியன் தொகை முறையே 2013 ஆம் ஆண்டில் பன்னல பிரதேச செயலாளருக்கும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் தெங்கு ஆராய்ச்சி சபைக்கு செலுத்தி 10 வருடங்கள் அளவிலான காலம் கடந்திருந்த போதிலும் அந்தக் காணி கணக்காய்வுத் திகதியான 2024 ஏப்ரல் 16 வரையிலும் பல்கலைக்கழகத்திற்கு கையேற்கப் பட்டிருக்கவில்லை. எனினும் 08 வயல் காணிகளில் 03 காணிக் கூறுகள் பல்கலைக்கழகத்திற்கு கையேற்பதற்கு தேவையற்று இருந்ததாக | பன்னல பிரதேச செயலாளரிடம் இருந்து வாய் மூல விசாரணை செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதி நடவடிக்கைகள் தொடர்பாக காணி அமைச்சின் ஆலோசனை பெறவேண்டியிருந்ததுடன் அவர்களால் அறிவிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் பண்ணல பிரதேச செயலாளரால் மேற்கொள்ளப்படும். | பல்கலைக்கழகத்திற்கு காணிகளை சட்ட ரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரால் 2022 திசம்பர் 22 ஆம் திகதிய கடிதம் மூலம் கல்வி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**3.2 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 இன் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1, 2.14.1 நியதிகள் மற்றும் 2020 மார்ச் 25 ஆம் திகதிய மேலதிகம் 35 (Supplement 35) இற்கு முரணாக விடுவிக்கப்படாமல் கையினால் எடுத்துவரப்படுகின்ற கூறுவிலைகள் பெறுகைக் குழுவிற்கு அனுப்பி 2023 ஆம் ஆண்டின் சனவரி முதல் யூன் 13 வரை வழங்கப்பட்ட பொருட்களுக்காக ரூபா 2,448,326 செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீடு பெறுகைக்குழு அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 05 மில்லியன் வரை ஆகக் குறைந்தது முத்திரையிடப்பட்ட 03 கூறு விலைகள் கோரி பெறுகைகளுக்காக 2006 இன் தேசிய பெறுகைகள் வழிகாட்டியின் 2.14.1 மற்றும் தேசிய பெறுகை கைநூலுக்கான 2020 மார்ச் 25 ஆம் திகதிய மேலதிகம் 35 மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் இந்தப் பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது . | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| லெபுயாய மருத்துவ பீட வளவில் நிர்மாணித்து 2020 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்ட கேட்போர்கூடம் (Conference Hall Building) மற்றும் சனசமூக நிலையம் (Community Center) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் பயனற்று காணப்பட்டது. | மருத்துவ பீடத்தின் கேட்போர்கூடத்திற்காக தேவையான கதிரைகள் இல்லாமையினால் அதனை பயன்படுத்துவதற்கு வசதியீனமான நிலைமைக்கு உட்பட்டிருந்தமை மற்றும் பதவியணியினர் பற்றாக்குறையின் காரணமாக தற்போது சனசமூக நிலையம் பயன்பாட்டிற்கு | வளங்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எடுப்பதற்கு முடியாதிருந்தது. | |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மருத்துவ பீடத்தில் கற்கை நடவடிக்கைகள் மற்றும் பிரயோக பயிற்சி நடவடிக்கைகளின் போது அத்தியவசிய பதவியான கல்விசார் பதவியணியினரினதும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஆய்வுகூட உதவியாளர் பதவிகளிலும் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு 2023 திசம்பர் 06 ஆந் திகதியில் உள்ளவாறு வெற்றிடமாகக் காணப்பட்டது. | கூடிய விரைவில் நேர்முகப்பரீட்சை நடாத்தி ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 05 மூலதன செலவின விடயங்களின் கீழ் கிடைக்கப்பெற்ற நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 10,157,907 செலவிடப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லையில் செலவினங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். |